செய்தி வெளியீட்டு எண்.96 நாள் : 19.06.2023

# செய்தி வெளியீடு

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர்களின் கல்வி உதவித்தொகை விண்ணப்பிப்பதற்கு கால அவகாசம் நிடிப்பு

2022–2023 ஆம் கல்வியாண்டிற்கு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் செயல்படுத்தப்படும் மத்திய அரசு நிதி ஆதரவிலான போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம் மற்றும் மாநில அரசு சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் விண்ணப்பிப்பதற்கு ஏதுவாக கல்லூரிகளுக்கான https://tnadtwscholarship.tn.gov.in என்ற இணையதளம் 30.01.2023 திறக்கப்பட்டு 31.05.2023 வரை கல்வி உதவித்தொகை விண்ணப்பிப்பதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டது.

தற்போது, மாணாக்கர்களின் கல்வி நலனைக் கருத்தில் கொண்டு மாணாக்கர்கள் கல்வி உதவித்தொகை விண்ணப்பிப்பதற்காக கல்லூரிகளுக்கான https://tnadtwscholarship.tn.gov.in என்ற இணையதளம் 16.06.2023 முதல் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. இவ்வாய்ப்பினை பயன்படுத்தி மாணாக்கர்கள் 30.06.2023க்குள் கல்வி உதவித்தொகை பெற விண்ணப்பிக்கலாம் என சென்னை மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

வெளியீடு;
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
சென்னை மாவட்டம் .